தமிழ் நாடு சட்டப் பேரவை.

வியாழக்கிழமை, 1974 மார்ச் 21.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மல்லியங்குப்பத்தில் புதிய பள்ளி

*531 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எல்லாபுரம் ஒன்றியம், மல்லியங்குப்பம் கிராமத்தில் பள்ளி தொடங்கும் செயற்குறிப்பு தற்போது எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் மல்லியங்குப்பம் கிராமத்தில் பள்ளி தொடங்குவது சம்பந்தமான பிரேரணை பள்ளிக் கல்வி இயக்குநரால் பெறப்பட்டு, அதனைப் பரிசீலனை செய்ததில் மேற்படி கிராமத்தில் புதிய ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி ஒன்று துவக்குவதற்கு அனுமதி வழங்குவதற்கில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, மல்லியங்குப்பம் கிராமத்தில் இருக்கிற மாணவர்கள் இப்பொழுது அத்திவாக்கம் என்ற ஊருக்கு பெரிய கால்வாயைக் கடந்து செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மேற்படி மல்லியங்குப்பம் கிராமத்தில் ஒரு கட்டடம் கூட கட்டி காத்துக் கொண்டிருக்கிறார்கள். இயற்கைத் தடை இருப்பதால், மறுபரிசீலனை செய்து மல்லியங் குப்பத்தில் ஒரு பள்ளிக்கூடத்தைத் திறக்க அரசு அனுமதி வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1974 மார்ச் 21

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்பட்டதன் பேரில், அந்தக் கிராமம் பள்ளியில்லாக் கிராமம் அல்ல என்றும், மேற்படி கிராமத்தில் பள்ளி செல்லும் பிள்ளைகள் 37 பேர் தான் உள்ளனர் என்றும், இன்னும் பள்ளியில் சேர்க்கப்பட வேண்டிய பள்ளி வயதுப் பிள்ளைகள் 13 பேர் மட்டுமே இருப்பதால் புதிய பள்ளி துவக்க அந்த எண்ணிக்கை போதுமானதாக இல்லை என்றும் காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கிராமத்திலிருந்து அரை கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு பள்ளியும், 1.4 கிலோ மீட்டர் தூரத்தில் மற்றொரு பள்ளியும், 1½ கிலோ மீட்டர் தூரத்தில் மற்றொரு பள்ளியும், ஆக மூன்று பள்ளிகள் நடைபெறுகின்றன. அண்மையில் நடைபெறும் பள்ளிகளுக்குச் செல்ல இயற்கைத் தடை ஏதும் இல்லை. அருகிலுள்ள ஆரம்பப் பள்ளிகளில் மேற்படி கிராமத்து பள்ளி வயதுப் பிள்ளைகள் சேர்ந்து படிக்க வாய்ப்பு உள்ளது. இதற்கு அருகே நடைபெறும் பள்ளிகளில் இப்போதுள்ள இடத்தை அதிகப்படுத்தி, மேற்படி கிராமத்தில் இன்னும் பள்ளியில் சேர்க்கப்பட வேண்டிய பள்ளி வயதுப் பிள்ளைகள் அனைவரையும் அங்கே சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். புதிய பள்ளி துவக்க அனுமதி வழங்கினால் போதுமான பிள்ளைகள் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்க இயலாது. மேற்படி கிராமத்தில் புதிய பள்ளி துவக்குவதால் அரசுக்கு கூடுதல் செலவினங்களுடன் தேவைக்கும் அதிகமாகக் கல்வி வசதிப் பெருக்கத்தையும் ஏற்படுத்தும்.

Ambikapuram Board High School

* 532 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the Hon. Minister for Education has received a petition, dated 27th July 1972 from the Building Committee Members of Board High School, Ambikapuram, Tiruchirappalli regarding the functioning of the school; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) எனினும் இதுபற்றிய புகார்கள் அரசின் கவனத்திற்கு வந்ததால் நிலைமை விசாரிக்கப்பட்டு வருகிறது.